# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.97/2021

2025 -ம் ஆண்டு ஜுன் மாதம் 25 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr-III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 25.06.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.விஸ்வநாதன் (PW-1) | வயது | : | 52/2025 |
| க/த பெயர் | : | திரு. பன்னீர்செல்வன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கினை யார் தாக்கல் செய்தார்கள் என்றால் என்னுடைய முதல்வர் கதிரவன் சொல்லியதன் பேரில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். இந்த வழக்கினை கதிரவனுக்காக ராஜேந்திரன் என்பவருக்காக இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். எனது முதல்வர் கதிரவன் ராஜேந்திரன் அவர்களுக்கு கடந்த 20.09.2021 ல் அதிகாரம் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அவருக்கு பின்னர் இந்த வழக்கை நான் நடத்தி வருகிறேன்.

எனக்கு எந்த தேதியில் எனது முதல்வர் பவர் கொடுத்திருந்தார் என்றால் 23.02.2022 ல் கொடுத்தார். எனது முதல்வர் கதிரவன் ராஜேந்திரனுக்கு கொடுத்த பவரினை ரத்து செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கடந்த 28.12.2022 ல்தான் எனது முதல்வர் ராஜேந்திரனுக்கு கொடுத்த பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்து அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான்.

**(பிரதிவாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.06.30 17:05:12 +0530

District Munsif
Mannargudi.